பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

07 10 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்க மாநிலத்தில் பிஜேபி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

2. பீஹார் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சிகள் தொகுதிப் பங்கீடு மற்றும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

3. இந்தியாவின் நலன்களைக் பாதுகாக்கும் வகையில் சர்வதேச விவகாரங்களில் நாட்டின் உத்தி இருக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. அமெரிக்க அதிபர் முன்மொழிந்துள்ள அமைதி திட்டம் குறித்து இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அதிகாரிகள் எகிப்தில் பேச்சுகளை தொடங்கி உள்ளனர்.

5. ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழ்நாடு அணி இன்று பட்னா அணியை எதிர்கொள்கிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் பிஜேபி சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அவர்கள் சென்றபோது தாக்கப்பட்டது அம்மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு மிக மோசமாக உள்ளது என்பதையே காட்டுகிறது என்று சமூக வலைதளப் பதவில் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த துயரமான நேரத்தில் மேற்குவங்க அரசும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியும் வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்த்து மக்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிஜேபி தொண்டர்களும், கட்சி நிர்வாகிகளும் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பீஹார் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சிகள் தொகுதிப் பங்கீடு மற்றும் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் ஐக்கிய ஜனதா தளம் லோக் ஜனசக்தி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு குறித்து தொடர்ந்து பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைமையிலான எதிர்க்கட்சிகள் அடங்கிய கூட்டணியில் தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை நேற்று பட்னாவில் நடைபெற்றது.

காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளின் தலைவர்களுடன் ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ் பேச்சுகள் நடத்தினார்.

இதனிடையே இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் ஆம் ஆத்மி கட்சி 11 வேட்பாளர்கள் அடங்கிய முதல் பட்டியலை வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய-நேபாள எல்லையில் போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு எல்லைப்புற ஆயுதப் படையின் தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பும் ஒருங்கிணைந்து செயல்பட முடிவு செய்துள்ளன.

இதுகுறித்து புதுதில்லியில் தேசிய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் தலைமை இயக்குநர் திரு. அனுராக் கார்க், எல்லைப்புற ஆயுதப் படையின் தலைமை இயக்குநர் திரு. சஞ்சய் சிங்கால் ஆகியோர் விவாதித்தனர்.

உளவுத்துறை அறிக்கை அடிப்படையில் ஒருங்கிணைந்து செயல்பட்டு போதைப்பொருள் கடத்தலை திறம்பட தடுக்க எல்லைப் பகுதியில் உள்ள பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடத்தல் தொடர்பான அனைத்து தொடர்புகளையும் கண்டுபிடித்து அழிப்பதற்காக இரு அமைப்புகளுக்கிடையே வலுவான ஒத்துழைப்பு அவசியம் என்று இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

<<<<>>>>

அடுத்த மாதம் முதல் தேதியிலிருந்து மற்ற நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு வரும் அனைத்து நடுத்தர மற்றும் கனரக வாகனங்கள் 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க வாகன தொழில் அந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய உந்துசக்தியாக உள்ளது.

இது உள்நாட்டு சரக்குப் போக்குவரத்தில் 73 சதவீதத்தைக் கொண்டுள்ளதால் அதனைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மெக்சிகோ, கனடா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் ஃபின்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து கனரக வாகனங்கள் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படுகிறது.

தற்போது ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வரும் இலகு ரக வாகனங்கள் மீது அமெரிக்கா 15 சதவீத வரி விதிக்கிறது.

<<<<>>>>

உலகில் அதிக போட்டி ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியா தனது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் உத்திகளை வகுக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச ஆய்வுப் பள்ளியில் ஆரவல்லி உச்சி மாநாட்டின் தொடக்க அமர்வில் நேற்று பேசிய அவர், ஒரு நாட்டின் அடையாளம் அந்த நாட்டின் செல்வாக்கு மிகுந்த கருத்துகளால் தீர்மானிக்கப்படுகிறது என்று கூறினார்.

வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களுக்கு இடையே நாட்டின் நலனைப் பாதுகாக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும் அவர் விளக்கினார்.

இந்த மாநாட்டில் அணுசக்தி கொள்கை, தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக விவாதங்கள் நடைபெற உள்ளன.

<<<<>>>>

காஸா போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க முன்முயற்சியில் எடுக்கப்பட்டுள்ள அமைதித் திட்டத்தில் உடன்பாட்டை எட்டுவதற்காக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அதிகாரிகள் மறைமுகமாக பேச்சுகள் நடத்தி வருகிறார்கள்.

எகிப்தின் Sharamel Sheikh-கில் இந்தப் பேச்சுகள் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் வசமுள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றால் இஸ்ரேல் வசமுள்ள பாலஸ்தீன கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று எகிப்து மற்றும் பாலஸ்தீன அரசுகள் உறுதியாக வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அமைதி உடன்பாட்டில் கையெழுத்திட தயாராக இருப்பதாக ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்புத் திருத்தம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் ஏற்கனவே முடிவு செய்துள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மாநிலங்கள் மற்றும் அனைத்து யூனியன்பிரதேசங்களில் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்காக பீஹார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

உயிரிழப்பு மற்றும் இரட்டைப் பெயர்ப் பதிவு வாக்காளர்கள் என்று 69 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்ட பின்னர் அம்மாநிலத்தில் 7 கோடியே 43 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா-கத்தார் இடையேயான இருதரப்பு வர்த்தகம் 2030ஆம் ஆண்டில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தோஹாவில் நேற்று நடைபெற்ற இந்தியா-கத்தார் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்திற்கான கூட்டு ஆணைய கூட்டத்தில் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை உள்ளபோதும் இந்திய பொருளாதாரம் தொடர்ந்து வலுவுடன் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள கத்தார் தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கத்தார் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. ஷேக் பைசல் பின் தானியும் கலந்துகொண்டார்.

இருதரப்பு வர்த்கம், முதலீடு, புதிய வாய்ப்புகளைக் கண்டறிதல் உள்ளிட்டவை தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர், உத்தராகண்ட், பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வும் தெரிவித்துள்ளது.

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக இந்த மழை பெய்யும் என்றும், வடமேற்கு இந்தியாவிலும் பெரும்பாலான பகுதிகளில் கனழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பீஹார், சத்தீஸ்கர், ஜார்கண்ட், மகாராஷ்டிராவின் மத்தியப் பகுதி, கோவா, கேரளா ஆகிய மாநிலங்களில் அடுத்த 2 முதல் 3 நாட்களில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழ்நாடு அணி இன்று பட்னா அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி சென்னையில் இன்றிரவு 8 மணிக்கு தொடங்க உள்ளது.

இன்றிரவு 9 மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் ஹரியானா - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 29-26 என்ற புள்ளிக் கணக்கில் ஜெய்ப்பூர் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் பட்னா அணி 36-28 என்ற புள்ளிக் கணக்கில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

<<<<>>>>

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Jaglan M - Jaglan L இணை நெதர்லாந்தின் Wassink - Jaille இணையை எதிர்கொள்கிறது.

ஃபின்லாந்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டியின் மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் கபிலா - Crasto இணை, பிரான்சின் Renoir - Pognante இணையை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெற்ற உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் வரலாற்று சிறப்பு மிக்க சாதனையை நிகழ்த்திய இந்திய அணிக்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் 22 பதக்கங்களை வென்றது, பாரா விளையாட்டுகளின் எதிர்கால வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளமாக அமைந்துள்ளது என்று சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

<<<<The End>>>>